# ட்ரு நியூஸ்

TRUE NEWS

ஆண்டு சந்தா ரூ.120/–
Annual Subcription Rs.120/-

| மலர் - 1 | இதழ் - 5 | ஆகஸ்ட் 2022 | விலை ரூ.10/- | தமிழ் மாதஇதழ் |
|---|---|---|---|---|
| Vol - 1 | Issue - 5 | August 2022 | Price: Rs.10/- | Tamil Monthly |



## FED வங்கியில் கொள்ளையடித்தவர் யார்?
## அவர்கள் கொள்ளையடித்தது எப்படி ?
## காவல் ஆணையர் சங்கர் ஜிவால் விளக்கம்!

## விரைவில் 79 புதிய மருத்துவமனைகள் மக்களின் பயன்பாட்டுக்கு வரவுள்ளது அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

## வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்க சென்னை மாநகராட்சி வேண்டுகோள்


Since : 1963
Sumeet
STRONG & RELIABLE
Manufacturer and Marketed by : SRH SUMEET RESEARCH & HOLDINGS PVT.LTD.,

# ட்ரு நியூஸ்

தமிழ் மாத இதழ்


மலர்: 1 இதழ்: 5 ஆகஸ்ட் 2022



**ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் :**

**EDITOR / PUBLISHER**

**கு.விஜயராகவன்**

**கௌரவ ஆலோசகர்**

**DR.A.லட்சுமணன்**

**PRO**

**சி.ன். கணேஷ்**

**உதவி ஆசிரியர்கள்**

**வி.மேரி, வே.ஹேமமாலினி, கு.சந்திரா, ச. நூரி**

**நிருபர்கள்**

**வீரபாண்டியன், மேகராஜன், தினேஷ், தண்டபாணி, ஜெய் முனி, வெங்கடேசன்,வே.சௌந்தர்யா, வே.ஜோதி, வெங்கடேசன், வேல்முருகன், ரவி,பாலு, பூர்ணிமா, ச.மேரி, சஞ்சய் மணிகண்டன், குமார், ராஜேஷ், ஷங்கர், மகேஷ், பன்னீர், பெருமாள், ஜெயக்குமார், விமலா, செந்தில், சுரேஷ், சக்தி, சசிகலா**

**சட்ட ஆலோசகர்**

**பா.உதயகுமார் B.A., B.L., LLM.**

**வடிவமைப்பு:**

**S.வேல்முருகன்-90925 78581**



**ADDRESS**

**No : 225, (1st Floor), Gandhi Road, Kavery Nagar, Saidapet, Chennai – 600 015.**

**Cell : 72000 33317**

**E.mail: truenews360.com@gmail.com**


## வாசகர்களின் கவனத்திற்கு

**உங்கள் பகுதியில் நடக்கும் சுவாரசியமான செய்திகளை வாசகர்களும் (தபால் / மின்னஞ்சல் / வாட்ஸ் சப்ப் எண் மூலம்) எங்களுக்கு எழுதி அனுப்பலாம்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

No 225, Gandhi Road, Kavery Nagar, Saidapet,Chennai- 600 015.Tamil Nadu. India

**மின்னஞ்சல்:**

truenews360.com@gmail.com

**வாட்ஸ் சப்ப் எண்:**

+91 72000 33317

# 2 பில்லியன் டாலரில் இஸ்ரோ நாசா உருவாக்கும் புதிய செயற்கைக்கோள் இஸ்ரோ முன்னாள் தலைவர் சிவன் தகவல்

நாசாவும், இஸ்ரோவும் இணைந்து 2 பில்லியன் டாலர் மதிப்பில் செயற்கைக்கோள் தயாரித்து வருகிறது என இஸ்ரோ முன்னாள் தலைவர் கே.சிவன் தெரிவித்தார்.

ஈரோட்டில் நடைபெறும் புத்தகத் திருவிழாவில் கலந்து கொண்ட இஸ்ரோ முன்னாள் தலைவர் கே.சிவன், ஐதராபாத் மத்திய பல்கலைக்கழக பேராசிரியர் வெ.முத்தமி ழரசனுக்கு, 'அறிவியல் மேதை ஜி.டி.நாயுடு விருதை வழங்கி பேசியதாவது:

இந்தியாவின் மக்கள் தொகையில் 80 சதவீதம் பேர் கிராம பகுதிகளில் வசிக்கின்றனர். இந்நிலையில், ஒரு புதிய தொழில்நுட்பம் வரும்போது, அது எல்லோருக்கும் போய் சேர்ந்தால்தான் அந்நாடு வளரும். உலகில் ராக்கெட் தொழில் நுட்பத்தை ஆங்கிலேயருக்கு எதிரான போரில், முதல் முதலில் திப்புசுல்தான் தான் பயன்படுத்தினார். எனவே, விண்வெளி தொழில்நுட்பத்தில் இந்தியாதான் முன்னோடி.

தற்போது, உங்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையும், நொடிகளும் விண்வெளி தொழில்நுட்பத்துடன் இணைந்துள்ளது. எப்போது புயல் அடிக்கும், கடலில் எந்த பகுதியில் அதிக மீன்கள் கிடைக்கும் என்பதைக் கண்டறியும் செயலியை கூட உருவாக்கியுள்ளோம். இதனால், ஒரு நாளைக்கு 4 ஆயிரம் கோடி மீன் வர்த்தகம் நடக்கிறது.

அதேபோல, சர்வதேச எல்லையை தாண்டும்போது அதனை வெளிப்படுத்தும் செயலி உள்ளது. ஆனால், நமது மீனவர்கள் அதனை பயன்படுத்துவது இல்லை. இன்றைய உலகில் செயற்கைக்கோள் இயக்கத்தை நிறுத்தினால், அனைத்தும் நின்று விடும். நாசாவும், இஸ்ரோவும் இணைந்து 2 பில்லியன் டாலர் மதிப்பில் செயற்கைக்கோள் தயாரித்து வருகிறது. அதன்மூலம் 700 கிமீ உயரத்தில் இருந்து, பூமியில் நடக்கும் ஒரு செமீ நகர்வைக் கூட கண்டுபிடிக்க முடியும். பூகம்பம், காலநிலை மாற்றம் போன்றவற்றை இது கண்காணிக்கும் என்பதுடன் இது உலகுக்கே உதவியாக இருக்கும் என்று கூறினார்.




# FED வங்கியில் கொள்ளையடித்தவர் யார்? அவர்கள் கொள்ளையடித்தது எப்படி ?

## காவல் ஆணையர் சங்கர் ஜிவால் விளக்கம்!

ஃபெடரல் வங்கியின் ஒரு பகுதியான ஃபெட் பேங்க் ஃபாஸ்ட் கோல்டு லோன்ஸ்ல் தங்க நகைகளுக்கான நகைக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வங்கியின் சென்னை, அரும்பாக்கம் கிளையில் கடந்த 2 நாட்களுக்கு முன்னர் சில கும்பல் ரூ.20 கோடி மதிப்பிலான 32 கிலோ தங்கத்தை கொள்ளையடித்து சென்றனர்.

இந்த கொள்ளை சம்பவத்தை அந்த வங்கியில் பணிபுரியும் ஊழியரான முருகன் என்பவர் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து நடத்தியுள்ளார். அதாவது வங்கி காவலாளிக்கு மயக்க மருந்து கலந்த குளிர்பானத்தை கொடுத்து கட்டிபோட்டுவிட்டு, மற்ற ஊழியர்களிடம் கத்தியை காட்டி மிரட்டி கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

பின்னர் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து தனிப்படைகள் அமைத்து கொள்ளையர்களை தீவிரமாக தேடி வந்த நிலையில், நேற்று கொள்ளையில் ஈடுபட்ட முருகனின் கூட்டாளிகளான பாலாஜி, சக்திவேல், சந்தோஷ் ஆகிய 3 பேரை கைது செய்தனர். மேலும் அவர்களிடம் இருந்து சுமார் 18 கிலோ தங்கத்தையும் பறிமுதல் செய்தனர்.

இந்த நிலையில், இன்று இந்த கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட முக்கிய குற்றவாளியான முருகன் என்பவர் திருமங்கலத்தில் வைத்து தனிப்படை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த சென்னை காவல் ஆணையர் சங்கர் ஜிவால், இந்த கொள்ளை சம்பவத்தை பற்றி கூறினார்.

அதாவது, "இந்த கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட கும்பலில் பாதி பேரை கைது

செய்துவிட்டோம். இந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 4 பேரை தவிர இன்னும் 2 3 பேர் இருக்கின்றனர். அவர்களை விரைவாக கைது செய்துவிடுவோம். தற்போது வரை 18 கிலோ தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளது. மீதி நகைகளை இன்னும் 2 3 நாட்களில் கைப்பற்றி விடுவோம்.

இந்த கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட அனைவரும் ஒரே பள்ளியில் படித்த நண்பர்கள் ஆவர். அவர்களில் முருகன் இந்த வங்கியில் 2 ஆண்டுகள் பணிபுரிந்து வந்தார். எனவே அவருக்கு எந்த நகை, எங்கு எவ்வளவு இருக்கும், யார் யாரெல்லாம் வங்கிக்கு வருவார் என்பதெல்லாம் தெரிந்துள்ளது. எனவே அவர் இதை எளிதாக செய்து முடித்துவிட்டார்.


அந்த கும்பலில் சூர்யா என்ற இளைஞர் தொடர்ந்து தலைமறைவாக இருக்கிறார். அவரை தேடும் பணிகளும் நடைபெற்று வருகிறது. சில ஊடகங்களில் வருவது போல் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் துப்பாக்கியெல்லாம்




பயன்படுத்தவில்லை. கத்தியை மட்டும் மிரட்டுவதாக பயன்படுத்தியுள்ளனர்.

வங்கியின் காவலாளி மயக்கமடைந்ததாக கூறுகிறார்; ஆனால் சிசிடிவியில் அவர் மயக்கமடைந்து போல் எதுவும் எங்களுக்கு தெரியவில்லை. எனவே அவர் குடித்த குளிர்பானத்தை ஆய்வுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். வங்கியில் எச்சரிக்கை மணி ஒலிக்காதது குறித்து விசாரணை நடைபெறுகிறது. விரைவில் தலைமறைவாக இருக்கும் கொள்ளையர்களும் பிடிபட்டு விடுவர்" என்றார்.





# விடுதலைக்காக முதலில் குரல் கொடுத்தது தமிழ்நாடுதான்

## வீரத் தமிழர்களின் பங்களிப்பை பறைசாற்றிய முதலமைச்சர்!

சுதந்திர திருநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை பின்வருமாறு : நமது இந்திய நாடு, ஆங்கிலேயரின் காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்றதன் 75ஆவது ஆண்டு நிறைவு விழாவை நாம் இப்போது கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். எண்ணற்ற தியாகிகளின் தன்னலமற்ற தியாகத்தால் பெற்ற விடுதலை இது! நமது வரலாறு எத்தனையோ தியாகிகளை, போராளிகளைக் கண்டிருக்கிறது! அத்தனை நெருப்பாறுகளையும் அகிம்சையால் கடந்த வரலாறு நம்முடையது! அதனால்தான் உலக அரங்கில் நாம் நெஞ்சு நிமிர்த்தி 'இந்தியர்கள்' என்று பெருமையோடு சொல்கிறோம்!

இந்தப் பெருமை என்பது, 'அகிம்சைப் பாதை' என்னும் அறவழியை நமக்குக் காட்டிய 'தேசத் தந்தை' அண்ணல் காந்தியடிகளையே சாரும்! அதனால்தான் முதலில் நாட்டு விடுதலைக்காகவும், பின்னர் சமூக விடுதலைக்காகவும் போராடிய தந்தை பெரியார் அவர்கள், மகாத்மா காந்தி அவர்கள் மதவெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டபோது, இந்த நாட்டிற்கு 'காந்தி தேசம்' என்று பெயரிட வேண்டும் என்று கூறினார். விடுதலைக்காக முதலில் குரல் கொடுத்தது தமிழ்நாடுதான்.. வீரத் தமிழர்களின் பங்களிப்பை பறைசாற்றிய முதலமைச்சர்!

விடுதலை நாளில், நமது தேசியக் கொடியை ஏற்றும்போது, இந்த வரலாற்றையெல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன். அதேபோல், இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநில முதலமைச்சர்கள் அனைவருக்கும் தேசிய கொடி ஏற்றுகின்ற உரிமையைப் பெற்றுத்தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் இந்த நேரத்தில் நான் நினைவுகூர்கிறேன்.

"தாயின் மணிக்கொடி பாரீர் அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

பட்டொளி வீசிப் பறக்கும் மூவண்ணக் கொடிக்கு முதல் வணக்கம்! இன்று நம் கண் முன் பறக்கும் இந்தக் கொடியை அறிமுகப்படுத்தி, 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசியல் நிர்ணய அவையில், உணர்ச்சிகரமான ஓர் உரையை, தீர்மானமாக முன்மொழிந்தவர் பண்டிதர் நேரு அவர்கள். அப்படித்தான் இம்மூவண்ணக்கொடி தேசியக்கொடி ஆனது.

அதேபோல், இந்தியா விடுதலை அடைந்தபோது, அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நள்ளிரவுப் பொழுதில், நாடாளுமன்றத்தில் அரசியல் நிர்ணய அவையின் தலைவரான டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களிடம், இந்திய நாட்டின் பெண்கள் அனைவரின் சார்பாகவும் முதல் கொடியை வழங்கியவர் ஹன்ச மேத்தா! விடுதலை இந்தியாவின் முதல் கொடியை ஒரு பெண்மணிதான் வழங்கினார்.

அத்தகைய மூவண்ணக் கொடியை வணங்குவதன் மூலமாக நாட்டை வணங்குகிறோம். நாட்டு மக்களை வணங்குகிறோம். நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றும் ஒருமைப்பாட்டு விழுமியங்களை வணங்குகிறோம். மூவண்ணக் கொடிக்கு முன்பு அணி அணியாய் அணிவகுத்து நிற்கும் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்!

75 ஆண்டுகளாக விடுதலைக் காற்றை சுவாசிக்கக் காரணமாக அமைந்த வீரத்தியாகிகள் அனைவருக்கும் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தகைய தியாகிகளை ஈந்த அவர்தம் குடும்பத்தினர் வாழும் திசை நோக்கி வணங்குகிறேன். தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, இந்திய நாட்டின் அனைத்து மக்களுக்கும் எனது விடுதலை நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாபெரும் கோட்டையின் கொத்தளத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றும்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் அடையும் மகிழ்ச்சி ஒருபக்கம் இருந்தாலும் தமிழன் என்ற அடிப்படையில் அடையும் உணர்ச்சிக்கும்



மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை. இந்த இந்தியத் துணைக்கண்டத்திலேயே விடுதலைக்காக முதலில் குரல் கொடுத்தது தமிழ்நாடுதான்.

1600ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் காலூன்றியது என்றால் 'ஒரு நெல் மணியைக் கூட உனக்கு கப்பம் கட்ட முடியாது' என்று 1755ஆம் ஆண்டு சொன்னவன் நெல்கட்டாஞ்செவல் பூலித்தேவன்.

சிவகங்கைக்கு அருகிலுள்ள பனையூரைச் சேர்ந்த மண்டியிடாத மானப்போர் புரிந்த மாவீரன் கான்சாகிப் மருதநாயகம் கொல்லப்பட்ட ஆண்டு 1764.'தானம் கேள் தருகிறேன், வரி என்று கேட்டால் தர மாட்டேன்' என்று சொன்ன மாவீரன்தான் கட்டபொம்மன். அவர் தூக்கிலிடப்பட்ட ஆண்டு 1799. தூக்குமேடைக்குச் செல்லும்போது கூட தன்னைக் காட்டிக் கொடுத்தவர்களைப் பார்த்து சிரித்தபடியே கட்டபொம்மன் சென்றதாக அன்றைய கவர்னர் எட்வர்ட் கிளைவ் அவர்களுக்கு தளபதி பானர்மென் எழுதிய கடிதம் சொல்கிறது.

கட்டபொம்மனின் மொத்தப் படைக்கும் தளபதியாக இருந்தவர் மாவீரன் சுந்தரலிங்கம். அவரது மாமன் மகள் வடிவு, தற்கொலைப் படைத்தாக்குதலை நடத்தியவர்.

காளையார்கோவில் தாக்குதலில் கணவர் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டதும், சினம் கொண்ட வேங்கையாக வெளியேறி, தன்னைப் போன்ற விடுதலைத் தாகம் கொண்டவர்கள் அனைவரையும் அணிசேர்த்து விடுதலைப் படை அணி கட்டியவர் வீரமங்கை வேலுநாச்சியார். பிரிட்டிஷ் ஆட்சியின் வசம் இருந்த சிவகங்கையை எட்டு ஆண்டு போருக்குப் பின்னால் மீட்டு மீண்டும் ராணியாக அமர்ந்தவர் வேலு நாச்சியார்.

தனது உடையில் நெருப்பை வைத்துக் கொண்டு பிரிட்டிஷ் ஆயுதக் கிடங்கில் தாக்குதல் நடத்தியவர் குயிலி. சின்னமருதுவும், பெரிய மருதுவும்

பீரங்கிகளுக்கு முன்பு வளரியால் வாகை சூடியவர்கள். இவர்கள் வைத்திருந்த வளரிக்கு முன்னால் பீரங்கிகள் சரியும் என்று எழுதினான் பிரிட்டிஷ் அதிகாரி கர்னல் வெல்ஷ்! இது 1801 ஆம் ஆண்டு!

'சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையில் ஒரு சின்னமலை' என்று சொல்லி மறைந்து, இன்றும் வரலாற்றில் பெரும் மலையாக வாழ்பவர் தீரன் சின்னமலை. அந்த மாவீரன் தூக்குமேடைக்கு சென்ற ஆண்டு 1805!

அவரது போர்ப்படையிலும் ஒற்றர்படையிலும் செயல்பட்ட தளபதி பொல்லான் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.1806ஆம் ஆண்டு வேலூர் கோட்டையில் பிரிட்டிஷ் ராணுவத்துக்கு பயம் என்றால் என்னவென்று காட்டப்பட்டது.

நான் சொன்னவை அனைத்தும் 1857ஆம் ஆண்டுக்கு முன்பே நடந்தவை. 1857 சிப்பாய் புரட்சியைத்தான் முதலாவது இந்திய விடுதலைப் போர் என்று சிலர் சொல்கிறார்கள். அதற்கு முன்னால் தெற்கில், அதுவும் தமிழ்நாட்டில் நடந்தவைதான் இவை.

செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் நின்று கொடியை ஏற்றும் போது தமிழனாக பெருமைப்படும், உணர்ச்சிவசப்படும் நிலை ஏற்படுவதற்கு இதுதான் காரணம்.

அடிமைப்படுத்துதல் என்று தொடங்கியதோ, அன்றைய நாளே விடுதலை முழக்கத்தை எழுப்பிய மண், நம்முடைய தமிழ் மண்! "இருநூறு ஆண்டுகள் ஆடு போல் வாழ்வதைவிட இரண்டே நாட்கள் புலியாக வாழ்வது மேல்" என்று சொன்ன திப்பு சுல்தானின் தீரம் கொண்ட படைவீரர்களைக் கொண்டிருந்த மண், நம்முடைய தமிழ் மண்!

அந்த வகையில், இந்திய விடுதலையின் பவள விழா நிறைவிற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் சில அறிவிப்புகளைத் தற்போது வெளியிடுவதில் பெருமையடைகிறேன்.

மாநில அரசின் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியத் தொகை, ஆகஸ்ட் 15 ஆம் நாள் முதல், ரூபாய் 18 ஆயிரத்தில் இருந்து ரூபாய் 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 9 ஆயிரத்தில் இருந்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித்தோன்றல்கள், சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள், சிவகங்கை முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள், வ.உ.சிதம்பரனார் வழித்தோன்றல்களுக்கான மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் 9 ஆயிரம் ரூபாயில் இருந்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

மற்றுமொரு மகிழ்ச்சியான அறிவிப்பையும் இந்த இனிய தருணத்தில் வெளியிட விரும்புகிறேன். ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு இணையாக, மாநில அரசுப் பணியாளர்களுக்கும் அகவிலைப் படியை உயர்த்தி வழங்கிடும் கோரிக்கையை ஏற்று, கடுமையான நிதிச்சுமைக்கு இடையிலும், அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 172022 முதல் அகவிலைப்படி 31 விழுக்காட்டில் இருந்து 34 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.இதன் மூலம், 16 இலட்சம் பேர் பயன்பெறுவர். அரசுக்கு ஆண்டுக்கு 1,947 கோடியே 60 லட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.



75 ஆண்டு கால விடுதலை இந்தியாவின் வரலாற்றை, மேல் நோக்கி நகர்த்துவதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஒற்றுமை உணர்வோடு வாழ்வோம். அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவு பெற்ற மாநிலங்களின் மூலமாக ஒன்றிய இந்தியாவை வளப்படுத்துவோம்" எனத்

# இளைஞர் சக்தி என்றும் சிறப்புடன் விளங்கச்செய்ய உறுதியேற்போம்

## கழக இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி



சுதந்திர தினத்தை முன்னிட்டு கழக இடைக்கால பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே.பழனிசாமி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:

இந்திய திருநாட்டின் 76வது சுதந்திர தின கொண்டாட்டத்தில், இளைஞர் சக்தியும், தேசிய உணர்வும், ஒருமைப்பாடும் நமது அன்னை பூமியை என்றும் இளமையுடனும் சிறப்புடனும் விளங்கச் செய்ய உறுதியேற்போம். அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்.

கழக இடைக்கால பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே.பழனிசாமி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதேபோல் கழக தலைமை நிலைய செயலாளரும், எதிர்க்கட்சி கொறடாவும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.வேலுமணி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:

தேச விடுதலைக்காக சொல்ல முடியாத் துயரைச்சுமந்து, உதிரங்களை உரமாக்கி, உயிரை துச்சமென நினைத்து தியாகம் செய்து, சுதந்திர காற்றை சுவாசிக்கச்செய்த எண்ணற்ற வீரர்களின் ஒப்பற்ற தியாகங்களை நினைவுகூர்ந்து அவர்களை போற்றி வணங்குவோம்! இனிய சுதந்திர தின வாழ்த்துகள்.

இவ்வாறு கழக தலைமை நிலைய செயலாளரும், எதிர்க்கட்சி கொறடாவும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.வேலுமணி கூறி உள்ளார்.

இதேபோல் முன்னாள் அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தனது டுவிட்டர் பதிவில் 76வது சுதந்திர தினத்தை கொண்டாடும் நாட்டு மக்கள் அனைவருக்கும் என் இனிய சுதந்திர தின வாழ்த்துகள். ஆங்கிலேயரின் அடிமை விலங்கொடிக்க இன்னுயிரை தியாகம் செய்த தியாகிகளை இரத்தம் சிந்திய சுதந்திர போராட்ட வீரர்களை நன்றியோடு நினைவு கூர்வோம் என்று தெரிவித்து உள்ளார்.

மேலும் கழக இடைக்கால பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே.பழனிசாமி, ஏற்கனவே வெளியிட்டு இருந்த அறிக்கையில் 13ந்தேதி முதல் 15ந்ஒதி வரை கழகத்தினரும், பொதுமக்களும் அவரவர் வீடுகளில் தேசியக்கொடியை ஏற்றி சுதந்திர தினத்தை கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

அதை ஏற்று கழகத்தினர் அனைவரும் அவரவர் வீடுகளிலும், மாவட்ட கழக செயலாளர்கள் அவரவர் மாவட்ட கழக அலுவலகங்களிலும், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களிலும் தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தியதோடு பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். மேலும் மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள், பரிசு பொருட்களை வழங்கி கவுரவித்தனர்.



# 'நம் தேசம் வளரவேண்டுமானால் பெண்களை மதிக்க வேண்டும்' பிரதமர் மோடி வலியுறுத்தல்

இந்தியாவின் வளர்ச்சிக்கு நாம் பெண்களை மதிக்க வேண்டும். நமது பெண் சக்திக்கு நாம் துணையாக இருக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சுதந்திர தின விழாவை ஒட்டி டெல்லி செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி தேசியக் கொடி ஏற்றினார். தேசிய கீதம் ஒலிக்கப்பட மரியாதை செலுத்தினார். பின்னர் நாட்டு மக்களுக்காக பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். உரையின் துவக்கத்தில் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களை நினைவுகூர்ந்த பிரதமர் மோடி அவர்களின் கனவின்படி இந்தியாவை வளர்ந்த நாடாக உருவாக்க மக்கள் 5 உறுதிமொழிகளை ஏற்க வேண்டும் என்று பட்டியலிட்டார். பின்னர் தேச வளர்ச்சியில் பெண்களின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டுப் பேசினார்.

பிரதமர் மோடி உரையிலிருந்து: இந்தியாவின் வளர்ச்சிக்கு நாம் நமது பெண் சக்திக்கு நாம் துணையாக இருக்க வேண்டும். பெண்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அதுதான் இந்திய வளர்ச்சிக்கான தூண். நம் பேச்சிலும், செயலிலும் பெண்களின் மாண்பைக் குறைக்கும் சிறு வெளிப்பாடு கூட இருக்கக் கூடாது. நம் தேசத்தின் மகள்கள், தாய்மார்கள் நாட்டுக்காக பெரும் பங்களிப்பை நல்கி வருகின்றனர். சட்டம், கல்வி, அறிவியல், காவல்துறை என நம் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் பெண் சக்தியின் பங்களிப்பு அளப்பரியது. பெண் வெறுப்பை துடைத்தெறிவோம். பெண்கள் முன்னேற்றத்தை உறுதி செய்தால் தேச முன்னேற்ற இலக்கை சீக்கிரமாக அடையலாம்.

75 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவிலேயே உருவான துப்பாக்கியிலிருந்து இந்திய தோட்டா முழங்கியதைக் கேட்டபோது பெருமையாக இருந்தது. இதற்காக இந்திய ராணுவத்திற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம் நாட்டின் குழந்தைகள் இறக்குமதி பொம்மைகளை தவிர்க்கும்போது நான் அவர்களுக்கு மரியாதையை உரித்தாக்குகிறேன். 5 வயது குழந்தை ஒன்று வெளிநாட்டு பொம்மை வேண்டாம் என்று கூறினால் அதன் நாடி நரம்புகளில் தேசப்பற்று பாய்கிறது என்று அர்த்தம். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# Railway Protection Force / Chennai always in front to give protection to Railway Passengers and their belongings.



Today on 07.08.2022 at about 07.30 hrs Two bonafide passengers by name Radhakrishnan & his wife Shruti , No.28, Jayaram street, Saidapet, Chennai-15 forgot their green colour bag in middle vendor coach of EMU train and gotdown at Saidapet Railway station.

Immediately, they approached Station master/O/Saidapet and further the matter was conveyed to on duty RPF staff shri. Mukesh Dayma, Con 1905658/MBM at Guindy Railway station. On information, the said constable quickly attended the said coach of EMU train at Guindy Railway station and secured the green colour bag which found to contain gold ornaments 3 bangles - 24 gms, 2 neclace - 24 gms, 2 ear rings - 8 gms, 1 long chain - 24 gms, 3 small chains - 32 gms and one hand ring - 2 gms Total 114 gms Valued Rs. 5 Lakhs approximately.

The said constable brought the recovered green bag to RPF office/Mambalam and handed over to the said Radhakrishnan and his wife under proper confirmation and acknow ledgement. He conveyed his heartly greetings to the RPF / Mambalam for timely securing his bag.

During the year 2022, total 35 left over bags containing Money Purse, Mobile phones, Camera, Gold & Silver Ornaments, cash etc. Total valued Rs. 4,86,380 were recovered from the trains and 12 Children were rescued by RPF / Mambalam .

**By Parsa Praveen, inspector, RPF/ Mambalam.**




It is informed that Railway Protection Force, Mambalam is going to organize a program " Run for unity" in view of 75 years of independence on 03.08.22 at about 07.00 hrs. Mini marathan will be started from T Nagar bustand.

# Railway Protection Force/ Chennai division is organizing various programs i.e. Tree plantation, Jaldhan, Fecilitation to freedom fighters, Shramdan and Run for unity in Chennai on the completion of 75 years of independence.



















Today on 03.08.22, Sri.Parsa Praveen, Inspector/RPF/Mambalam organized a programme "Run for Unity" in view of the "Azadi ka Amrit Mahotsav;" launched by Prime minister on 12.03.21 at Sabarmathi Ashram, Gujrat.

In the above program , Officers and Staff of Mambalam RPF (20 members) and students of sri.Ramakrishna Mission Higher Secondary school, Tnager (35 students) are participated. Local police /R1 police station, Tnager provided necessary B/B and pilot. The Marathan was started at Tnager bustand at about 07.00 hrs with RPF staff and students and ended at about 08.00 hrs.

It is awereness to the public to educate the importance of independence day and how we got independence from britishers and how many real heroes sacrifices their lives for independence etc.

## மருத்துவம் அறிவோம்



# ஆரோக்கிய வாழ்வின் அவசியம்

"சிலர் காலையில் எழுந்திருக்கும் போதே சுறுசுறுப்பு இன்றி இருப்பர். மனம் சொல்லும் வேகத்திற்கு உடல் செயல்படாது. இவர்களில் பலர் அடிக்கடி காபி குடித்தே நாளினை ஓட்டுவார்கள். இது தவறான முறை. காலப் போக்கில் நம்மை பாதித்து விடும். சரி இவ்வாறு காபி குடிப்பது, சிகரெட் பிடிப்பது இவற்றினைத் தவிர்த்து வேறு எந்த நல்ல முறைகளில் நம்மை சுறுசுறுப்பாக ஆக்கிக் கொள்ளலாம் என்று பார்ப்போம். சிலருக்கு எழுந்தவுடன் சிறிது நேரம் தூங்க வேண்டும் என்று தோன்றும். பரவாயில்லை தூங்குங்கள். 2030 நிமிடங்கள் ஆகும் போது நீங்களாகவே சுறுசுறுப்பாக ஆகி விடுவீர்கள்.

சோர்வு என்பது உடலில் சற்று நீர் வற்றிய தன்மையின் காரணமாகக் கூட இருக்கலாம். இதன் காரணமாகக் கூட தூக்கம் வரலாம். எனவே காலையில் பல் தேய்த்தவுடன் சுத்தமான இரண்டு கிளாஸ் நீர் குடியுங்கள். முடிந்தால் காபியினை நாள் முழுவதும் தவிர்த்து நீர் குடிக்கலாம். காலையில் உடலை சற்று யோகா செய்து இயல்பு நிலைக்கு கொண்டு வர வேண்டும். குளிர்ந்த நீரில் 'ஷவர்' முறையில் குளிப்பது ஒருவரை சுறுசுறுப்பு ஆக்கி விடும். பல் தேய்த்த உடனேயே முகத்தில் நன்கு நீர் அடித்து கழுவலாம். காலையில் "பிரேக்பாஸ்ட்" எனப்படும் காலை உணவு மிக அவசியம். முழு தானியம், புரதம், கொட்டை வகைகள், பழங்கள் எடுத்துக் கொள்ளலாம்.


சிலர் காலை உணவிலேயே கேசரி, சர்க்கரைப் பொங்கல் என ஆரம்பித்து விடுவார்கள். இவர்கள் எளிதில் சோர்வடைந்து விடுவார்கள். மதியம் வரையிலாவது சுவீட் உணவுகளை எடுத்துக் கொள்ளாது இருப்பது காலை சோர்வினை நீக்கும். காலையில் சற்று காலாற நடங்கள். கடைக்கு போய் சாமான் வாங்குங்கள். வெளி உலகினை சுற்றிப் பாருங்கள். சுகாதார வாழ்க்கை முறை, தேவையான அளவு தூக்கம் இவை அவசியம். ஆரோக்கியமான வழி முறைகளை மட்டுமே எதிலும் கையாளுங்கள். உணவு, பேச்சு, எண்ணம், செயல் இவை அனைத்திலுமே ஆரோக்கியம், ஆக்கப்பூர்வம் இவை இருக்க வேண்டும். சிலவற்றினை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என ஒரு மனநல ஆய்வின் கருத்தினை படித்தேன். அதனை பகிர்ந்து கொள்கிறேன்.

ஒரு பழக்கத்தினை சாதாரண மனிதன் அன்றாட வழக்கத்திற்கு கொண்டு வர சுமார் 66 நாள் தொடர் முயற்சி இருக்க வேண்டும். நாம் சமைப்பதை விட அதே சமையல் குறிப்பினை அடுத்தவர் செய்து உண்ணும் போது அதை கூடுதல் சுவையாக உணருவார்கள். அறிவுபூர்வமான ஒன்றினை கேட்க நேரிடும் போது மனம் ஆக்கப்பூர்வமான 5 நினைவுகளை மறந்து விடுகிறதாம். உணவை பாதுகாக்க என சில பொருட்களை சேர்க்கும் பழக்கம் உள்ளது. பொதுவாக எளிதாய் கூடுதல் உப்பினை

சேர்ப்பர். இவ்வாறு இன்றி அந்தந்த நேரத்தில் பிரஷ்ஆக செய்து சாப்பிடும் முறை மூலம் ஒருவரின் மூளை கூர்மை கூடுதல் திறன் பெறுகிறது.

சங்கோஜ சுபாவம் உடையவர்கள் தன்னைப் பற்றி குறைவாகவே மற்றவர்களிடம் பேசுவார்கள். தனிமையில் இருப்பது என்பது (ஆன்மீக வழியில் இருப்பவர்களை தவிர்த்து) பலருக்கு ஆரோக்கியம் பாதிப்பதாகவே அமைகிறது. ஒருசெயலை செய்ய பலர் 'பிளான் ஏ', 'பிளான் பி' என்று உருவாக்குவார்கள். 'பிளான் பி' என்ற ஒன்று உருவாகும் போது 'பிளான் ஏ' சற்று வலுவிழந்து விடுகிறது. பெண்களிடம் ஒரு கேள்விக்கு பொய் சொல்வது கடினம். ஏனெனில் அநேக பெண்கள் உண்மை அறிந்த பின்னரே கேள்விகளை கேட்கின்றனராம். நாம் கேட்கும் இசையின் தன்மை, நமக்கு பிடிக்கும் இசையின் தன்மை ஆனது நாம் உலகை பார்க்கும் கண்ணோட்டத்திற்கு அடிப்படை ஆகிறது. நான் நன்றாக தூங்கினேன்.

நன்றாக ஓய்வு எடுத்தேன் என்று நமக்கு நாமே சொல்லிக் கொள்ளும் போது நம் மூளையும் அதன் படியே செயல்படுகிறது. எப்போதும் மகிழ்ச்சியாய் இருப்பவர்களோடு நாம் இருந்தால் நாமும் மகிழ்ச்சியாகவே இருப்போம். தினசரி சிறிதளவு மஞ்சளினை உட்கொண்டால் நோய் நீங்க உதவுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. சிறிது நேரம் அமைதியாக கண்களை மூடி அமர்ந்தால் உங்கள் உடல் நல பாதிப்பினை உங்களால் உணர முடியும். அதே போல் அமைதியாய் இருந்தால் பல விஷயங்களுக்கு தீர்வுகள் பிரபஞ்சத்தில் இருந்து கிடைக்கும். படபடப்பின்றி இருந்தாலே நிறைய சாதிக்கலாம். சிலருக்கு அடிக்கடி உடலில் அரிப்பு இருக்கும். முதுகில் அரிப்பு ஏற்பட்டால் நெளிந்து வளைந்து சொரிய முடியாமல் படும்பாடு பெரும்பாடு தான். இது சிறு விஷயமாக அவ்வப்போது தோன்றி மறையலாம். வெயில், வியர்வை காரணமாக இருக்கலாம். சற்று கடுமையாகவும் சிவப்பு திட்டு, போன்ற சரும பாதிப்புகளோடும் இருக்கலாம். பொதுவில் குளிர்ந்த நீரில் குளிப்பது, சரும மாஸ்ட் ரைஸ் பயன்படுத்துவது போன்றவை பயன் அளிப்பவை தான்.ஆனால் சிலருக்கு சருமம் வறண்டு இருக்கும். இதனை டிரைஸ்கின் என்று கூறுவர்.



இவர்களுக்கு பொதுவில் சரும அரிப்பு இருக்கும். குளிர் காலங்களில் கூடுதலாக இருக்கும். வயது கூடும் பொழுது பாதிப்பும் கூடும். வறண்ட சருமம் உடையவர்கள் குளிர்ந்த அதாவது சாதாரண நீரில் குளிக்க வேண்டும். சுடு நீர் பயன்படுத்தினால் சரும பாதிப்பு கூடும். வெகுநேரம் நீரில் இருக்கக்கூடாது. மென்மையான சோப்புகளை பயன்படுத்த வேண்டும். தேவையான அளவு நீர் குடிக்க வேண்டும். அரிப்புடன் சிவப்பு, தடிப்பு ஏற்படும் பொழுது கிருமிகள், பூஞ்சை பாதிப்பு இருக்கின்றதா என பார்க்க வேண்டும். பூச்சிகள், கொசு, எறும்பு இவை கடிப்பதாலும் பாதிப்பு ஏற்படலாம். எக்ஸிமா பாதிப்பு போன்றவை அதிக வறட்சியுடன் இருக்கும். பரம்பரை குறைபாடு, ஆஸ்துமா, அலர்ஜி போன்றவை காரணமாக இது ஏற்படுவது உண்டு. சில வகை உணவுகளும் இதனை அதிகப்படுத்தலாம். சிலருக்கு சில பொருட்களை தொட்டாலோ. சில வகை நகைகளை அணியும் பொழுதோ இவ்வாறு சரும பாதிப்பு ஏற்படும் வாய்ப்புகள் உண்டு. ஸ்ட்ரெஸ், அதிக சூடு, உடற்பயிற்சி, வெயிலில் வருவது போன்றவை கூட சருமத்தினை பாதிக்கலாம். சிலருக்கு கர்ப்பகாலத்தில் அரிப்பு பாதிப்பு ஏற்படலாம்.

சில வகை மருந்துகளும் சரும அரிப்பினை ஏற்படுத்தலாம். வைரஸ், நரம்பு பாதிப்பு இவைகளும் அரிப்பிற்கு காரணம் ஆகலாம். சரும நிபுணர்கள் வறண்ட சருமத்திற்கான சிறப்பு மாய்ஸ்டரைசர் லோஷன் கொடுப்பார்கள். இதனை பாதிப்பிற்கேற்றாற் போல் பல முறை தடவ வேண்டி இருக்கலாம். துணி துவைக்கும்பொழுது, பாத்திரம் கழுவும் பொழுது கையுறைகளை அணிந்து கொள்வது கட்டாயம் ஆகும். மிருதுவான டவல் கொண்டு உடலை ஒற்றி எடுக்க வேண்டும். தலையில் பொடுகு,

பேன் இன்றி இருத்தல் வேண்டும். சர்க்கரை நோய், சிறுநீரக நோய், ரத்த பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு, எச்.ஐ.வி., அதிக தைராய்டு ஹார்மோன் சுரப்பது போன்றவற்றினாலும் அரிப்பு ஏற்படும் என்பதால் எதற்குமே கூடுதல் கவனம் கொடுப்பது அவசியமாகின்றது. காரணத்தினை மருத்துவர் மூலம் அறிந்து உரிய சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். சிலருக்கு செடிகளைத் தொட்டால் கூட அரிப்பு ஏற்படும்.

65 வயதிற்கு மேல் வயதாகும் பொழுது சருமம் மென்மை ஆகின்றது. எண்ணை பசை தன்மையும் வறண்டு விடுகின்றது. தலையில் பொடுகு இருந்தால் அரிப்பு பாதிப்பு கூடும். சில புது புது வகையான லோஷன்களை தலையில் பயன்படுத்தும்பொழுது ஒவ்வாமை காரணமாக அரிப்பு கூடும். சதை மடிப்புகளில் அரிப்பு ஏற்படுவது பூஞ்சை பாதிப்பு காரணமாக இருக்கக் கூடும். சிலருக்கு இரவில் குடலின் வெளி வாயிலில் தாங்க முடியாத அரிப்பு ஏற்படும். பின் வார்ம் எனப்படும் புழுவின் பாதிப்பினால் ஏற்படும். இதற்கு குடும்பத்தில் அனைவரும் மருத்துவர் மூலம் சிகிச்சை பெற வேண்டும். சிலருக்கு இரவில் அதிக அரிப்பு ஏற்படும். கர்ப்ப காலம், மாதவிடாய் நிற்றல் இந்த காலங்களில் ஹார்மோன் மாறுபாடுகளால் இந்த அரிப்பு ஏற்படலாம். எக்ஸிமா, சோரியாசிஸ் போன்றவைகள் மருத்துவ உதவி மூலம் அதிகம் பலன் தரக்கூடியவை. இந்த உடலை காப்பாற்ற, உள் உறுப்புகளை காப்பாற்ற, புதுசு புதுசாக வரும் நோய்களில் இருந்து நம்மை காப்பாற்றிக் கொள்ள மருத்துவ உலகம் 'விழிப்புணர்வாக' பல செய்திகளை அன்றாடம் தொடர்ந்து அறிவுறுத்தி மக்களை காக்கின்றது. ஆனால் நமது உடல் கூட ஏதேனும் பெரிய தாக்குதல் ஏற்படுவதற்கு முன் பல நேரங்களில் அறிகுறிகளாக வெளிப்படுத்துகின்றது. நாம் அதன் மொழியினை கேட்க, கவனிக்கத் தவறி விடுகின்றோம். இன்று அதிகமாக பேசப்படும் மாரடைப்பு நோயினைப் பற்றி பார்ப்போமா!

★ நமக்கு எப்போதாவது சோர்வு ஏற்படலாம். இது இயற்கைதான். ஆனால் பக்கத்தில் கடைக்குப் போய் வருவதற்குள் சோர்வு ஏற்படுகின்றதா? உடனே சற்று கவனம் கொடுக்க வேண்டும். ஏதோ சற்று மூச்சு வாங்குவது போல் தோன்றுகின்றதா? உடனடி மருத்துவர் மூலம் ஈசிஜி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். எப்பொழுதும் மன உளைச்சல், மன அழுத்தம் என்றே இருந்தால் இருதய நோயினை நீங்களே வரவழைத்து விடுவீர்கள்.




# வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்க சென்னை மாநகராட்சி வேண்டுகோள்



வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்க வேண்டும் என வாக்காளர்களிடம் மாநகராட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள விவரங்களை உறுதி செய்வதற்காக, வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும் படிவம் 6பியை வாக்காளர்கள் தாமாக முன்வந்து பூர்த்தி செய்து வழங்க வேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள விவரங்களை உறுதி செய்வதற்காகவும், வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணி நாடு முழுவதும் 1.8.2022 முதல் நடைபெற்று வருகிறது.

அதன்படி, தன்னார்வ அடிப்படையில் அனைத்து வாக்காளர்களும் தாமாக முன்வந்து தங்கள் ஆதார் எண்ணினை வாக்காளர் அட்டையுடன் இணைத்துக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவம் 6B--ஐ பூர்த்தி செய்து, வாக்காளர்கள் தங்களது ஆதார் அட்டை எண்ணை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் அளிப்பதன் மூலம் ஆதார் எண்ணினை இணைத்துக் கொள்ளலாம்.

மேலும், வாக்காளர்கள் https:/www.nvsp.in/ இணையதளம் மற்றும் Voters Helpline App மூலமும், தங்கள் ஆதார் எண் விவரங்களை வாக்காளர் அட்டையுடன் இணைத்து கொள்ளலாம். ஆதார் எண் இல்லாத வாக்காளர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட 11 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை அளிக்கலாம்.

1. மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி சட்ட அடையாள அட்டை, 2. ஓட்டுநர் உரிமம், 3. பான் கார்டு, 4. இந்திய கடவுச்சீட்டு, 5. வங்கி, அஞ்சலகங்களின் புகைப்படத்துடன் கூடிய கணக்குப் புத்தகம், 6. தொழிலாளர் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட சுகாதாரக் காப்பீட்டு ஸ்மார்ட் கார்டு, 7. தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் படி வழங்கப்பட்ட இருப்பிட அடையாளச் சான்று, 8. புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்.

9. மத்திய, மாநில, பொதுத்துறை நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணிக்கான அடையாள அட்டை

10. பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேல்சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டை

11. இந்திய அரசாங்கத்தின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அடையாள அட்டை (UDID)

எனவே, மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்காளர்களும் பூர்த்தி செய்யப்பட்ட படிவம் 6பி உடன் தங்களது ஆதார் அட்டை எண்ணை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் தாமாக முன்வந்து அளித்தோ அல்லது https:/www.nvsp.in/ இணையதளம் மற்றும் Voters Helpline App வழியாகவோ தங்களது ஆதார் எண் விவரங்களை வாக்காளர் அட்டையுடன் இணைத்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# தொடர் கேள்விகளால் ஆத்திரமடைந்த பிரபல நடிகை



அமீர் கான் கரீனா கபூர் நடிப்பில் சமீபத்தில் வெளியான படம் 'லால் சிங் சத்தா'. இந்த படத்துக்கு கலவையான விமர்சனங்கள் கிடைத்து வருகின்றன. இந்த படம் வெளிவருவதற்கு முன்பு கரீனா கபூர் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்பொழுது அவரிடம் 'லால் சிங் சத்தா' படம் குறித்து பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. தொடர் கேள்விகளால் ஆத்திரமடைந்த அவர் ஒருகட்டத்தில், 'உங்களை யார் படம் பார்க்க சொல்லி கட்டாயப்படுத்தினார்கள்? எங்கள் படங்களை பார்க்க வேண்டாம். நீங்கள் பார்க்காததால் ஒன்றும் மோசமாகி விடப்போவது கிடையாது' என்று கூறினார். அவரின் இந்த கருத்துக்கு திரையுலகினர் கண்டனம் தெரிவித்தனர். ரசிகர்கள் தரப்பிலும் பல விமர்சனங்கள் எழுந்தன.

இதையடுத்து படத்தை புறக்கணிக்க போவதாக ரசிகர்கள் சமூக வலைதளங்களில் சில கருத்துகளை பதிவிட்டனர். இதனால் அதிர்ச்சிக்குள்ளான கரீனா கபூர் ஒரு வீடியோ பதிவு வெளியிட்டார். அதில், 'இந்த படத்தை புறக்கணிக்காதீர்கள். 2.5 வருடமாக இந்த படத்துக்காக 250 பேர் உழைத்து இருக்கிறார்கள். அவர்களுக்காக இந்த படத்தை பாருங்கள் ஆதரவு தாருங்கள்' என கூறியுள்ளார்.

இதற்கிடையில் கரீனாவின் இந்த இருவேறு கருத்துகளையும் ஒன்றாக இணைத்து சமூக வலைதளங்களில் ரசிகர்கள் அவரை கேலி செய்து வருகிறார்கள். 'கரீனா கபூர் வாயை கொடுத்து மாட்டிக்கொண்டு விட்டார்' என சக நடிகர்களும் கருத்து தெரிவிக்கிறார்கள். இதனால் கரீனா கபூர் செய்வதறியாது திகைத்திருக்கிறார்.

# திருமணம் எப்போது? அம்மு அபிராமி விளக்கம்



இயக்குனர் பரதன் இயக்கத்தில் விஜய் நடிப்பில் வெளியான 'பைரவா' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர் அபிராமி. இவர் தொடர்ந்து நடித்த 'ராட்சசன்', 'அசுரன்' போன்ற படங்கள் மிகப்பெரும் வெற்றியடைந்தது. இதன் மூலம் இவர் ரசிகர்கள் மத்தியில் கவனம் ஈர்க்கப்பட்டார். அதன்பின் என் ஆளோட செருப்ப காணோம், தீரன் அதிகாரம் ஒன்று, துப்பாக்கி முனை உள்ளிட்ட மேலும் பல படங்களில் நடித்து இருக்கிறார். தற்போது 6 புதிய படங்களில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் சமூக வலைத்தளத்தில் அம்மு அபிராமியிடம் உங்களுக்கு திருமணம் எப்போது என்று ரசிகர்கள் பலர் கேள்வி எழுப்பினர். இதற்கு பதில் அளித்து அம்மு அபிராமி கூறும்போது, "எனது திருமணம் குறித்து நிறைய கேள்விகள் வந்துள்ளன. எனக்கு 22 வயதுதான் ஆகிறது. திருமணம் செய்து கொள்வதை விட எனது வாழ்க்கையில் நிறைவேற்ற பல கனவுகள் உள்ளன. திருமணத்துக்கு இது சரியான நேரம் என்று நினைக்கும்போது திருமணம் செய்து கொள்வேன்" என்றார்.

# டேட்டிங் செயலி பிளாக்மெயில்கள்! பெண்களுக்கு தேவை கூடுதல் எச்சரிக்கை...

'ஸ்மார்ட்' போன்களின் தயவால் தற்போது உலகம் ரொம்பவே சுருங்கிவிட்டது. கடலை மிட்டாய் முதல் காதலி வரை எல்லாவற்றையும் செயலிகளுக்குள் (Apps) கொண்டுவந்துவிட்டனர். ஆம், மனித உறவுகளையும் கூட தற்போது கடைச்சரக்காக மாற்றிவிட்டன 'டேட்டிங்' செயலிகள். "சில தளங்கள் நீண்ட கால உறவுகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால் எங்கள் செயலியில், உங்களுக்கு 'ரொமான்டிக்' அனுபவத்தை வழங்குவதற்காகவே நாங்கள் செயல்படுகிறோம். உங்கள் இணையிடம் நீங்கள் தேடுவது எதுவாக இருந்தாலும் அதை பூர்த்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை நாங்கள் வழங்குகிறோம்" என்று விளம்பரம் வெளியிட்டுள்ளது ஒரு பிரபல 'டேட்டிங்' செயலி. இதுபோன்ற கவர்ச்சி விளம்பரங்களாலும், அதில் வரும் புகைப்படங் களாலும் தூண்டப்படும் இளைஞர்கள் 'டேட்டிங்' செயலிகளுக்கு ஏராளமாக பணம் கட்டி ஏமாறுகிறார்கள். அல்லது இதுபோன்ற 'டேட்டிங்' செயலிகளை பயன்படுத்தி அறிமுகமாகும் மோசடி நபர்களின் மிரட்டல்களால் பணத்தையும், மானம், மரியாதையையும் இழக்கிறார்கள். மாறிவரும் கலாசாரத்தின் அடையாளமாக 'டின்டர்', 'பம்புள்', 'ஹிங்கே', 'ஹப்பன்' போன்ற 'டேட்டிங்' செயலிகள் தற்போது இந்தியாவிலும் பிரபலமாகி வருகின்றன. உலக அளவில் 'டின்டர்' ஒரு கோடிக்கும் மேற்பட்ட சந்தாதாரர்களை கொண்டுள்ளது. இதுபோன்ற பெரிய 'பிராண்டுகள்' மட்டுமன்றி உள்ளூர் அளவிலான 'டேட்டிங்' செயலிகளும் ஏராளமாக வந்துவிட்டன



முன்பின் தெரியாத ஆண், பெண் இரண்டு தரப்பினரையும் தொடர்புப்படுத்தி காசு பார்ப்பதுதான் 'டேட்டிங்' செயலிகளின் அடிப்படை 'லாஜிக்' என்பதை பயனாளர்கள் நினைவில் கொள்ளவேண்டும். அளவுக்கு அதிகமாக கட்டணம் வசூலிக்கும் 'டேட்டிங்' செயலிகளையும், அவர்களின் 'ஏஜெண்டு'களையும் முற்றிலும் தவிர்த்துவிடுங்கள். 'டேட்டிங்' செயலிகளை வாய்ப்பாக பயன்படுத்தி ஏராளமான 'பிளாக்மெயில்' கும்பல்கள் அலைந்து கொண்டிருப்பதை மனதில்கொண்டு, முன்பின் தெரியாதவர்களிடம் எச்சரிக்கையோடு பழகுங்கள். மேலை நாடுகளைப்போல் பெண்களுக்கு சம உரிமையும், சம வாய்ப்புகளும் நமது நாட்டில் இன்னும் சாத்தியப்படாத நிலையில், 'டேட்டிங்' செயலிகள் மூலமாக அறிமுகமாகும் முன்பின் தெரியாத நபர்கள் குறித்து இங்குள்ள பெண்கள் கூடுதல் எச்சரிக்கை கொண்டிருக்கவேண்டும் என்பது எனது சிறப்பு வேண்டுகோள்.

**இந்த இதழில் வெளியிட**
**உங்கள் வாழ்வில் நீங்கள் கண்ட துக்கம், வேதனை, சோதனை, அனுபவத்தை எங்களுக்கு எழுதலாம்**
**தொடர்புகொள்ள:**
whats app number : +91 7200033317
Email id : truenews360.com@gmail.com





நந்தனம் தபால் அலுவலகத்தில் 75வது ஆண்டு சுதந்திர தின விழாவை திரு.கனகவேல் (போஸ்ட் மாஸ்டர்) வழிகாட்டுதலின் பேரில் தபால் ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பாக கொண்டாடினார்கள்.

# சட்டம் தெரிந்துக் கொள்வோம்




உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம் 2006 என்ற புதிய சட்டம் அரசாணை எண் G.S.R. 362 இன் படி 05.08.2011ம் தேதி முதல் இந்தியா முழுவதும் அமலுக்கு வந்துள்ளது. இச்சட்டம் ஏற்கனவே அமலில் இருந்து வந்துள்ள உணவுக் கலப்படத் தடைச்சட்டம் 1954க்கு (PREVENTION OF FOOD ADULTERATION ACT 1954) மாற்றாக மத்திய அரசினால் இயற்றப்பட்டுள்ளது.

இப்புதிய சட்டத்தில் விஞ்ஞானப் பூர்வமான குழுக்கள் எதுவும் அமைத்து உணவுப் பொருள்களின் தரங்கள் குறித்து உரிய ஆராய்ச்சிகள் மேற்கொண்டு தரங்கள் நிர்ணயிக்கப்படவில்லை. தேவையான மாற்றங்கள் எதுவும் செய்யப்படாமல் 1954ம் ஆண்டுச் சட்டத்தை அப்படியே பிரதி எடுத்தாற்போல் உருவாக்கி அமலாக்கி யிருக்கிறார்கள்.

புதிய சட்டத்தில் செய்யப்பட்டுள்ள மாறுதல்கள் உணவுப் பொருள்கள் தயாரிப்பு மற்றும் வணிகத்திற்கு முன்னர் வெறும் ரூபாய் 15/மட்டும் கட்டணம் செலுத்தி (PFA) லைசென்ஸ் பெற்று வந்த நடைமுறைகளை, வெகுவாகக் கட்டணங்களை உயர்த்தியும், பல புதிய நிபந்தனைகளைப் புகுத்தியிருப்பதும் தான். மேலும் உணவுக் கலப்படக் குற்றங்களுக்கான தண்டனைகளும், அபராதங்களும் மிகுதியாகப் பல மடங்குகள் உயர்த்தப்பட்டுள்ளன. கலப்படமே இல்லாத நடைமுறையில் ஏற்படும் சிறிய பிழைகள் கூட, கலப்படமாக அறிவிக்கப்பட்டு, பெரிய அபராதங்களுக்கு வழி செய்வதாக உள்ளது.

லைசென்ஸ் பெறுவதிலிருந்து விலக்குப் பெற்றவர்கள் ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாய் விற்பனைத் தொகை (TURN OVER) உடைய சிறு வணிகர்கள் (PETTY BUISNESS OPERATOR ) இப்புதிய சட்டத்தின் கீழ் லைசென்ஸ் பெற வேண்டிய நடை முறையில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அவர்கள் கண்டிப்பாக இதற்கென நியமிக்கப்பட்டுள்ள பதிவு அதிகாரிகளிடம் (REGISTERING AUTHORITY) படிவம் 'A (FORM A) ஐப் பூர்த்தி செய்து தங்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் இவர்களும் ஒவ்வொரு ஆண்டும் தங்களின் உரிமத்தைப் புதுப்பித்து வர வேண்டும். சிறிய உணவுப் பொருள் தயாரிப்பாளர்களோ அல்லது வணிகர்களோ கண்டிப்பாக அடிப்படைச் சுகாதார வசதிகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். பதிவு அதிகாரிகளால் வழங்கப்படும் ரிஜிஸ்ட்ரேசன் சான்றிதழையும் போட்டோ ID கார்டையும் கடை, அல்லது தயாரிப்பு இடத்தில் பிரதானமான இடத்தில்

பார்வைக்குத் தெரியும்படி மாட்டியிருக்க வேண்டும். மேற்படி இடங்களை உரிய அதிகாரிகள் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு முறையாவது கண்டிப்பாக மேற்பார்வைக்கு (INSPECTION) வருவார்கள். உணவுப் பொருள்களின் தரம் மேம்படுத்தப் பட வேண்டும். நுகர்வோர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும். என்ற நோக்கில் கொண்டு வரப்பட்டுள்ளது.

இச்சட்டம் வரவேற்கத்தக்கதுதான். ஆனால், இந்தச்சட்ட விதிகளை முறையாகப் பின்பற்றாமல் செயல்படுபவர்களுக்கு, விதிக்கப்படும் தண்டனையும் மிகக் கடுமையானது என்ற கருத்து உணவுப் பொருள் தயாரிப்பாளர்கள் மற்றும் வர்த்தகர்களிடையே நிலவுகிறது.

நாட்டில் தகவல் தொழில் நுட்பத்துறை, மருந்துகள் தயாரிப்புத் துறைகளுக்கு அடுத்தபடியாக உணவுப் பொருள்கள் தயாரிப்புத் தொழில் உள்ளது. இது நாளுக்கு நாள் வேகமாக வளர்ந்து வருகிறது.

2015 க்குள் உணவுப் பொருள் தயாரிப்புத்துறையில் 12 லட்சம் கோடி அளவுக்கு விற்பனை இருக்கும். என்று உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கான அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது புதிய சட்டத்தில் சில கடுமையான விதிகள் அமல் படுத்தப்பட்டுள்ளதால் சிறு தொழில்கள் பாதிக்கப்படும். பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்று சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அச்சம் தெரிவிக்கின்றன. மத்திய அரசின் உணவுப் பாதுகாப்பு, மற்றும் தர நிர்ணயச்சட்டத்திற்கு மதுரை உயர்நீதி மன்றம் இடைக்காலத்தடை வழங்கி இருக்கிறது. தமிழத்தில் 5000க்கும் அதிகமான வணிகர் சங்கங்கள் உள்ளன. ஒவ்வொரு சங்கமும் தனித்தனியாக நீதி மன்ற உத்தரவு பெறுவதென்பது சாத்தியமானதல்ல.

இச்சட்டம் கொடுமையானதும், தேவையற்றதுமாகப் பலரால் கருதப்படுகிறது. அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்பதாலேயே நீதிபதி இப்படித் தீர்ப்பளித்திருக்கிறார். தரம் குறைந்த உணவுப் பொருள்களை விற்பனை செய்வோர் மீதும் உற்பத்தி செய்வோர் மீதும் நடவடிக்கை எடுக்கத் தமிழக அரசின் தரக்கட்டுப்பாட்டுத்துறை இன்று வரை செயல்பட்டு வருகிறது.

எனவே மத்திய அரசு புதிய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைப் பரிசீலித்துத் தக்க சீர்திருத்தங்களை மேற்கொண்டு அதன் பின்னரே அவற்றைச் செயல்படுத்த முன் வர வேண்டும். கடுமையான குழப்பமான, விதிமுறைகள் கொண்ட இச்சட்டத்தால் வணிகர்களுக்குப் பல்வேறு நடை முறைச் சிக்கல்கள் அதிகமாகி லஞ்சமும், ஊழலும், பெருகும் எனபதில் ஐயமில்லை. ஆகவே “”ஆதிக்கத்தை முறியடிப்போம். பெற்ற சுதந்திரத்தைக் காப்போம்”.


**விளம்பரதாரர்களின் கவனத்திற்கு**

உங்கள் தொழில் முன்னேற்றத்திற்கு
**ட்ரு நியூஸ்–யில்**
விளம்பரம் செய்து பயனடைவீர்.

**தொடர்புக்கு: 72000 33317**

**கலர்**

பின்பக்க அட்டை - ரூ. 15,000/-
முன்பக்க அட்டை - ரூ. 12,000/-
பின்பக்க உள் அட்டை - ரூ. 10,000/-

**கருப்பு வெள்ளை**

முழு பக்கம் - ரூ. 7,000/-
அரை பக்கம் - ரூ. 3,500/-
கால் பக்கம் - ரூ. 2,000/-



# பண்டைய தமிழக வரலாறு

*சங்க காலம் கிமு 300 முதல் கிபி 300 வரை*

கடல்கோளால் அழிந்த தென் மதுரையில் முதல் சங்கம், கபாடபுரத்தில் இடைச்சங்கமும், மதுரையில் கடைச்சங்கம் இருந்ததாக கருதப்படுகிறது சங்ககாலத்தை தமிழர்களின் பொற்காலம் என்பர்.தமிழில் இயற்றப்பட்ட பழமையான நூல் தொல்காப்பியம் இது கடைச்சங்கம் காலத்தில் இயற்றப்பட்டது. எட்டுத்தொகையில் பத்துப்பாட்டு புறநானூறு ஆனால் அது ஆகியவையும் சங்ககாலத்தில் ஏற்றப்பட்டன.

தமிழகம் ஒரு காலத்தில் தமிழ் மக்களை மட்டுமே குடிமக்களாக கொண்டிருந்தது. தமிழ் அரசர்கள் ஆகிய சேர சோழ பாண்டியர் தமிழகத்தை ஆண்டு வந்தனர். தமிழ்மொழி ஒன்றே நாட்டில் நிலவி இருந்தது. தமிழ் நாகரிகம் ஒன்றே தமிழகத்தில் பரவி இருந்தது. என்ன நாளடைவில் வடமொழி வாணர் சிறுசிறு தொகையினராக தமிழகத்தில் குடியேறினர். அவர்கள் பண்பாட்டு மொழியுடனும் வேதம் முதலிய நூல்கள் உடனும் புகுந்தமையால், அந்நாட்டு மக்கள் அவர்களை மதித்தனர். சிறந்த நாகரீகத்தில் வாழ்ந்த தமிழக மக்கள், வந்தவரை விருந்தினரை வரவேற்று, அவர்களிடமிருந்த நல்லவற்றை கைக்கொண்டனர். கூட்டுறவால் தொல்காப்பியருக்கு முற்பட்ட சங்க காலத்திலேயே தமிழ் மொழியில் வட சொற்கள் கலக்கத் தொடங்கின. இவ்வாறே வழிபாடு சமயம் முதலியவற்றிலும் புதிய பல கருத்துக்களும் பழக்கங்களும் இடம் பெறலாயின. வந்தவர் வழிபட்ட தெய்வங்களுக்கு தமிழகத்தில் கோயில்கள் உண்டாயின; அவர்கள்தான் சமயக் கதைகளும் இங்கு இடம்பெற்றன. இவ்வாறு வடமொழியாளர் கூட்டுறவால் தமிழகத்தில் சில துறைகளில் கலப்புகளும் மாறுதல்களும் ஏற்பட்டன. இவை வரலாற்றில் உண்டான மாறுதல்கள்.

**தெனிந்திய அரசுகள்:** பண்டைய தமிழகம் ஆனது, சேர, தோழா, பாண்டிய நாடு என்ற முப்பெரும் அரசியல் பிரிவுகளைக் கொண்டதாக இருந்தது. இது சங்க காலம் எனப்பட்டது. பின்னர் களப்பிரர்கள் கிபி 300 முதல் 600 ஆம் ஆண்டு வரையில் ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் தமிழகத்தை ஆண்டனர். அதன் பின்னர் பல்லவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

**பல்லவர் வரலாறு (Pallavargal)**

**பல்லவர்களின் அரசியல் வரலாறு**

அவர்களின் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இவர்களில் பாரசீகத்தை சேர்ந்தவர்கள் என்றும், சாதவாகனர்கள் கீழ் ஆட்சி அலுவலராக இருந்தவர்கள் என்றும், தொண்டை

மண்டலத்தை தாயகமாக கொண்டவர்கள் என்றும் கூறுவர்.

பல்லவ மரபை, முற்கால பல்லவர் பிற்கால பல்லவர் என பிரித்து வழங்குவர். இவரின் தலைமையில் பல்லவர்கள், களப்பிரர்களை தோற்கடித்து வட தமிழ் நாடான தொண்டை மண்டலத்தில் நமது ஆட்சியை நிறுவினர். பல்லவர்களின் தலைநகரம் காஞ்சிபுரம் ஆகும்.

### பிற்காலப் பல்லவர்கள் (கிபி 570–903)

பிற்கால பல்லவ அரசர்களில் முதன்மையானவர் சிம்மவிஷ்ணு. இவர் களப்பிரர்களை வீழ்த்தி பல்லவர் ஆட்சி தொண்டை மண்டலத்தில் தொடங்கி வைத்தார். பின்னர் சோழ பகுதிகள் சிலவற்றை கைப்பற்றினர். மேலும் வடக்கில் ஆந்திர பகுதியான விஷ்ணுகுண்டின் முதல், தெற்கில் காவிரியாறு வரையில் விரிந்ததொரு பேரரசு நிறுவினார். அதனால் அவனிசிம்மன் அதாவது உலகின் சிங்கம் என புகழப்பட்டார்.

### முதலாம் மகேந்திரவர்மன் (கிபி 600–630)

சிம்ம விஷ்ணுவின் மகன் முதலாம் மகேந்திரவர்மன் ஆவார். அவரது காலத்தில் சாளுக்கியர்களோடு பகைமை ஏற்பட்டது. மத்திய அரசு இரண்டாம் புலிகேசி, பல்லவ நாட்டின் மீது போர் தொடுத்தார். மகேந்திரவர்மனை தோற்கடித்து பல்லவ நாட்டின் வடபகுதிகளை கைப்பற்றினார்.

மகேந்திர வர்மன் தமது ஆட்சியின் தொடக்கத்தில் சமண சமயத்தை பின்பற்றினார். பின்னர் சைவக்குரவர் அப்பர் என்பவரால் சைவ மதத்திற்கு மாற்றப்பட்டார். மகேந்திர வர்மன் பல்வேறு திறன்களை கொண்டிருந்தார். கட்டிடக் கலையிலும், ஓவியக் கலையும் இசைக் கலையிலும், கொண்ட ஈடுபாட்டினால் இவர் பல சிறப்புப் பெயர்களை பெற்றிருந்தார். இவர் மகேந்திர மங்கலம், மகேந்திரவாடி என்ற இரண்டு நகரங்களை நிறுவினார்.

### முதலாம் நரசிம்ம வர்மன் (கிபி 630–668)

முதலாம் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மவர்மன் ஆவான். இவரை மாமல்லன் என்றும் அழைப்பர் மற்போரில் சிறந்தவர் என்பது இதன் பொருளாகும். சாளுக்கிய தலைநகரான வாதாபிக்கு படையெடுத்துச் சென்று வென்றதால் இவரை 'வாதாபி கொண்டான்' எனவும் புகழப்பட்டார்.



இவரது நண்பர் மானவர்மனுக்காக, இரு முறை இலங்கையின் மீது போரிட்டு வென்று ஆட்சியை மீட்டுக் கொடுத்தார். சிம்மவர்மன் ஆட்சியின் போதுதான் சீன பயணி யுவான்சுவாங், தலைவர் காஞ்சிக்கு வருகை தந்தார்.

நரசிம்மவர்மன் சிறந்த கட்டிடக்கலை நிபுணராகவும் விளங்கினார். மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் ரதங்கள் இவரது கட்டிடக்கலைக்கு சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும். இவரைத் தொடர்ந்து இரண்டாம் மகேந்திரவர்மன் (கிபி668–670), முதலாம் பரமேஸ்வரவர்மன் (கிபி670–691)ஆகியோர் ஆட்சி புரிந்தனர்.

### இரண்டாம் நரசிம்மவர்மன் (இராஜசிம்மன்) கிபி 691–728

முதலாம் பரமேஸ்வரவர்மன் மகன் இரண்டாம் நரசிம்மவர்மன் ஆவான். இவரது ஆட்சி காலத்தில் பல்லவ நாடு, அமைதியும் வளமும் கொண்டு விளகியது. காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோயில், மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயில், பனைமலையில் தாளகிரீசுவரர் கோயில் உட்படபல ஆலயங்களை இவர் கட்டினார்.

இவரது அரசவையில் பல அறிஞர்கள் இடம்பெற்றிருந்தனர். அவர்களுள் தண்டி என்ற வடமொழி அறிஞர்களும் ஒருவராவார். இவர் தண்டி அலங்காரம் என்னும் இலக்கண நூலை எழுதினார். சிம்மவர்மன் ஆட்சியில் சீனாவுடன் வணிக உறவு ஏற்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

தொடரும்...

# பப்பாளி சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்

ஆண்டு முழுவதும் கிடைக்கும் பழ வகைகளுள் ஒன்று, பப்பாளி. ஆனாலும் மற்ற பழங்களை போல் பப்பாளியை பலரும் விரும்பி சாப்பிடுவதில்லை. ஏன் பப்பாளி பழத்தை தவிர்க்கக்கூடாது என்பது குறித்து பார்ப்போம். 1. செரிமானத்தை மேம்படுத்தும் பப்பாளி பழத்தில் புரதத்தை ஜீரணிக்க உதவும் சைமோபாபைன் மற்றும் பபைன் போன்ற என்சைம்கள் இருப்பதால், செரிமான செயல்முறை எளிதாக நடைபெறும். மலச்சிக்கல் மற்றும் குடல் நோய் பாதிப்புகளையும் கட்டுப்படுத்தும் தன்மை பப்பாளிக்கு உண்டு. மேலும் பப்பாளியில் நிறைந்துள்ள நார்ச்சத்து செரிமான அமைப்பை சீராக செயல்பட வைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. உடலின் வளர்சிதை மாற்ற செயல்பாட்டை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது.

2. புற்றுநோய்க்கு எதிராக பாதுகாப்பு அளிக்கும் புற்றுநோய் போன்ற நாள்பட்ட நோய் பாதிப்புக்கு ஆளாகாமல் பாதுகாக்கும் ஆற்றலும் பப்பாளிக்கு இருக்கிறது. இதில் ஆன்டி ஆக்சிடென்டுகள் நிறைந்துள்ளது. அது ப்ரீ ரேடிக்கல்களால் ஏற்படும் ஆக்ஸிஜனேற்ற சேதத்தை குறைக்க உதவுகிறது. மேலும் பப்பாளியில் உள்ள லைகோபீன், புரோஸ்டேட் புற்றுநோய் அபாயத்தைக் குறைக்க உதவும் பீட்டா கரோட்டினுடன் இணைந்து அத்தகைய புற்றுநோயை தடுக்கக்கூடியது. பப்பாளியில் உள்ள நார்ச்சத்து குடல் இயக்கத்துக்கு ஆரோக்கியம் சேர்ப்பதால் பெருங்குடல் புற்றுநோய் அபாயத்தையும் தவிர்க்கலாம்.


2. இதயத்தைப் பாதுகாக்கிறது பப்பாளி, இதயத்திற்கு ஆரோக்கியமான உணவாகவும் கருதப்படுகிறது. இதில் பொட்டாசியம் மிகுதியாக இருக்கிறது. வைட்டமின் சி மற்றும் ஆன்டிஆக்சிடென்டுகளும் அதிகம் உள்ளன. இவை அனைத்தும் தமனிகளை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது. மேலும் உடலில் ரத்த ஓட்டம் சீராக செயல்படுவதற்கும் ஊக்குவிக்கிறது. பக்கவாதம், மாரடைப்பு மற்றும் உயர் ரத்த அழுத்த அபாயத்தைக் குறைக்கும்



கெட்ட கொலஸ்ட்ராலை கட்டுப்படுத்தவும் பப்பாளி உதவுகிறது. 4. மூளையை பாதுகாக்கும் மூளை செல்களை சிதைப்பதன் மூலம் நினைவாற்றல் இழப்பு பிரச்சினையை ஏற்படுத்தும் நோய், அல்சைமர். அறிவுசார் திறன்களை இழக்க செய்துவிடும் ஒருவகை நரம்பியல் கடத்தி நோயும் கூட. பிரீ ரேடிக்கல்கள் மற்றும் ஆன்டி ஆக்சிடென்டுகளுக்கு இடையே சம நிலையின்மை நிலவுவதன் விளைவாக செல்கள் சேதம் அடைகின்றன. பப்பாளி மற்றும் புளித்த பப்பாளி சாற்றை உட்கொள்வதன் மூலம், ப்ரீ ரேடிக்கல்களால் ஏற்படும் ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்தை கட்டுப்படுத்த முடியும் என்று சில ஆய்வுகள் கூறுகின்றன. ஆதலால் பப்பாளி பழத்தை தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் அல்சைமர் நோயின் வீரியத்தை குறைக்கலாம்.

5. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் இதில் அதிக அளவு வைட்டமின் சி இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் உதவும் என்பதை அறிந்து கொள்வதும் அவசியமானது. 6. கண்களை பாதுகாக்கும் உடலின் மிக முக்கியமான பாகங்களில் ஒன்றாக கண்கள் இருப்பதால் அவற்றை பாதுகாப்பது முக்கியமானது. பப்பாளி, தசை சிதைவு போன்ற நோய்களில் இருந்து கண்களை பாதுகாக்கின்றன. இதுமட்டுமல்லாமல் பப்பாளியில் வைட்டமின் ஏ சத்தும் நிறைந்துள்ளது. இது கார்னியாவை பாதுகாக்க உதவுகிறது. ஆன்டி ஆக்சிடென்டுகளும் நிறைந்திருப்பதால் விழித்திரை சிதைவை குறைக்கவும், பார்வை திறனை மேம்படுத்தவும் உதவுகிறது. 7. வலியை குறைக்க உதவும் இயற்கை வலி நிவாரணியாக செயல்படும் பப்பேன் என்ற நொதி பப்பாளியில் இருக்கிறது. இது வீக்கத்தை எதிர்த்து போராடவும், சில வகையான வலிகளை குறைக்கவும் உதவும். மேலும் அழற்சி எதிர்ப்பு தன்மை கொண்ட பாபாயின் இருப்பதால், கீல்வாதம் காரணமாக ஏற்படும் மூட்டு வலியை குறைப்பதற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

# தினமும் லிப்ஸ்டிக்கை போடுவதால் சந்திக்கும் பிரச்சனைகள் !



இன்று பெண்கள் பலரும் தங்கள் உதடுகளை அழகாக வெளிக்காட்ட அன்றாடம் தவறாமல் லிப்ஸ்டிக் போடுவார்கள். லிப்ஸ்டிக்கை போடுவதால் உதடுகள் பொலிவிழந்து போவதோடு, உடலின் உள்ளுறுப்புகளும் பாதிப்படைய ஆரம்பமாகும். அத்தகைய லிப்ஸ்டிக்கை போடுவதால் சந்திக்கும் பிரச்சனைகள் பற்றி பார்ப்போம். லிப்ஸ்டிக்கால் ஏற்படும் தீமைகள்

★ லிப்ஸ்டிக்கில் குரோமியம், காட்மியம் மற்றும் மக்னீசியம் அதிக அளவில் இருப்பதால் தினமும் லிப்ஸ்டிக்கைப் பயன்படுத்தினால் உடலில் உள்ள உறுப்புகள் பாதித்து கடுமையான நோய் ஏற்பட வழிவகுக்கின்றது.

★ லிப்ஸ்டிக்கில் காட்மியம் சிறுநீரகத்தில் படிந்து அவை நாளடைவில் சிறுநீரக செயலிழப்பை ஏற்படுத்தும். மேலும் ஒரு நாளைக்கு பலமுறை லிப்ஸ்டிக் போட்டுவதினால் வயிற்றில் கட்டிகள் வளர ஆரம்பிக்கும்.

★ லிப்ஸ்டிக்கை அன்றாடம் பயன்படுத்தி வந்தால் உடலில் உள்ள நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதோடு, மூளையும் பாதிப்பிற்குள்ளாகும். இதற்கு முக்கிய காரணம் லிப்ஸ்டிக்குகளில் நரம்புகளை அழிக்கக்கூடிய ஈயம் அதிகமாக இருப்பதுதான்.

★ உடலில் ஏற்படும் மாற்றங்களுக்கு மிக முக்கிய காரணமாக லிப்ஸ்டிக் உள்ளது. மேலும் இதனால் உடலில் ஹார்மோன் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் மலட்டுத்தன்மை ஏற்படுகிறது.

★ லிப்ஸ்டிக் தயாரிப்பில் பெட்ரோகெமிக்கல்கள் பயன்படுத்தப்படுவதால் இவை நாளமில்லா சுரப்பிகளில் சீர்குலைவை ஏற்படுத்தி இனப்பெருக்கம், வளர்ச்சி, புலனாய்வு திறன் போன்றவற்றை அழிக்கும்.



# சத்து நிறைந்த கம்பு தோசை

**தேவையான பொருட்கள்:**

கம்பு 400 கிராம், இட்லி அரிசி 400 கிராம், உளுந்தம் பருப்பு 200 கிராம், வெந்தயம் 2 ஸ்பூன், கல் உப்பு தேவையான அளவு

**செய்முறை:**

காய்ந்த கம்பினை முதலில் அலசி, சுமார் 5 மணி நேரம் ஊற வைக்கவும். கம்பு ஊற வைத்த இரண்டு மணி நேரம் கழித்து, இட்லி அரிசியை கழுவி, கம்புடன் சேர்த்து மூழ்கும் வரை தண்ணீர் ஊற்றி, ஊற வைக்கவும். உளுந்தம் பருப்பு, வெந்தயம் இரண்டையும் நன்கு அலசி சுமார் 1மணி நேரம் ஊற வைக்கவும். பின்னர் கம்பு மற்றும் உளுந்தம் பருப்பு ஆகியவற்றை ஊற வைத்த தண்ணீரைப் பயன்படுத்தி, கிரைண்டரில் முதலில் அரிசி மற்றும் கம்பினை நைசாக அரைத்து எடுக்கவும்.

பின்னர் உளுந்தம் பருப்பு, வெந்தயத்தை நைசாக தோசை மாவு பதத்தில் அரைத்து எடுக்கவும். தேவையான உப்பினை, கம்பு மற்றும் அரிசி மாவினை தோண்டுவதற்கு ஒரு நிமிடத்திற்கு முன்னர் மாவில் சேர்த்து, ஒருசேர அரைத்ததும் தோண்டவும். பின்னர் இரண்டு மாவினையும் ஒருசேரக் கரைத்து, ஐந்து முதல் ஆறு மணி நேரம் புளிக்க வைத்துக் கொள்ளவும். தோசைக் கல்லில் புளித்த மாவினை மெல்லிய தோசைகளாக வார்த்து எடுக்கவும். லேசான பச்சைநிறத்தில் சுவையான கம்பு தோசை தயார். இதற்கு தொட்டுக் கொள்ள தக்காளி சட்னி, தேங்காய் சட்னி, சாம்பார் உள்ளிட்டவைகள் பொருத்தமாக இருக்கும்.

# சிட்டி போன்ற ரோபோட் அறிமுகம் செய்த சியோமி

சியோமி நிறுவனம் நேரலை நிகழ்ச்சியில் தனது சைபர் ஒன் ரோபோட்ஐ அறிமுகம் செய்து இருக்கிறது. இது மனித உருவம் கொண்ட ரோபோட் ஆகும். மனித உணர்வுகளை புரிந்து கொள்ளும் திறன் கொண்ட ரோபோட் மணிக்கு 3.6 கிமீ வேகத்தில் செல்லும். சியோமி சைபர் குடும்பத்தில் இரண்டாவதாக அறிமுகமாகி இருக்கிறது சைபர் ஒன் ரோபோட். முன்னதாக கடந்த ஆண்டு நான்கு பயோனிக் கால்களை கொண்ட ரோபோட் டாக் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த ரோபோட் பற்றிய தகவல்கள் முழுமையாக அறிவிக்கப்படவில்லை.

இந்த ரோபோட் மொத்த எடை 52 கிலோ, உயரம் 1.77 மீட்டர்கள் ஆகும். நடப்பது, ஓடுவது, பொருட்களை எடுப்பது உள்ளிட்டவைகளை இந்த ரோபோட் செய்யும். மேலும் மணிக்கு அதிகபட்சமாக 3.6 கிமீ வேகத்தில் செல்லும் திறன் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சைபர் டாக் அறிமுகம் செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு சைபர் ஒன் ரோபோட் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த ரோபோட் 45 வித்தியாசமான உணர்ச்சிகளை கண்டறிய முடியும். இதன் முகம் வளைந்த OLED பேனல் கொண்டிருக்கிறது. மேலும் இதில் உள்ள இரு மைக்ரோபோன்கள் காதாகவும், இரண்டு கேமராக்கள் மூன்று கோணங்களில் பார்க்கவும் வழி செய்கிறது. 13 மணிக்கட்டுகள் மூலம் இந்த ரோபோட் 21 வித்தியாசமான டிகிரிக்களில் நடமாட முடியும். இதில் உள்ள மோட்டார்கள் 300 நியூட்டன் மீட்டர் டார்க் இழுவிசையை வெளிப்படுத்தும். ஆரம்பக் கட்டத்தில் உள்ள சியோமி சைபர் ஒன் ரோபோட் ஐ உருவாக்க சுமார் ஒரு லட்சம் டாலர்கள், இந்திய மதிப்பில் ரூ. 79 லட்சத்து 68 ஆயிரம் வரை செலவாகும் என சியோமி நிறுவன தலைமை செயல் அதிகாரி லெய் ஜூன் தெரிவித்தார்.



# மத்திய அரசு விருது "என் உழைப்புக்கு கிடைத்த அங்கீகாரம்" ஆயக்குடி இன்ஸ்பெக்டர் கே.அமுதா

சிறப்பு புலனாய்வுக்கான மத்திய உள்துறை அமைச்சகத்தின் விருது கிடைத்ததை எனது உழைப்புக்கு கிடைத்த அங்கீகாரமாகக் கருதுகிறேன் என ஆயக்குடி இன்ஸ்பெக்டர் கே.அமுதா தெரிவித்தார்.

பழநி அருகே உள்ள ஆயக்குடி இன்ஸ்பெக்டராகப் பணிபுரிபவர் கே.அமுதா. இவரது சிறந்த பணிக்காக மத்திய அரசு விருது வழங்கி உள்ளது. இது குறித்து அவர் `இந்து தமிழ்' செய்தியாளரிடம் கூறியதாவது: கடந்த ஆண்டு விசாரணைக்கு எடுத்துக் கொண்ட வழக்குகள், அவற்றில் எத்தனை தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது ஆகிய விவரங்களை சேகரித்து திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து ஐந்து பேரை மத்திய அரசு விருதுக்குப் பரிந்துரை செய்தனர். போக்ஸோ, கஞ்சா, கொலை என 2020-21ம் ஆண்டில் அதிக வழக்குகளை விசாரித்ததோடு மட்டுமின்றி, அந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனையும் பெற்றுத் தந்துள்ளேன். வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. அவற்றுக்கு தண்டனை பெற்றுத் தந்தது ஆகியற்றின் அடிப்படையில் இந்த விருதை வழங்கியுள்ளனர்.

நான் பணிபுரியும் காவல் நிலையத்துக்குச் சென்றால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையை பொதுமக்களிடம் ஏற்படுத்தினேன். பணியில் சேர்ந்தது முதல் மாவட்ட அளவில் கூட இதுவரை ஒரு விருது கூட பெற்றதில்லை. எனது உழைப்புக்கு என்றாவது ஒரு நாள் அங்கீகாரம் கிடைக்கும் என நம்பினேன். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. தற்போது மத்திய அரசு மூலம் கிடைத்துள்ள இந்த விருது என்ற அங்கீகாரம் என்னை மேலும் கடமையுடன் பணியாற்றத் தூண்டும். இவ்வாறு அவர் கூறினார்.





# நெருக்கடிகளை மீறித் தொடரும் உழவர்களின் சேவை

## இந்தியா 75

விடுதலைக்குப் பிந்தைய இந்திய வேளாண்மை மூன்று முக்கிய காலகட்டங்களைக் கடந்து வந்துள்ளது. ஒன்று, தொடக்கக் கால வளங்களைக் கட்டமைத்த காலம் (1950–60). இரண்டாவது, பசுமைப் புரட்சிக் காலம் (1961–90). மூன்றாவது, உலகமயக் காலம் (1991 முதல் இன்றுவரை).

கடந்த 75 ஆண்டுகளில் இந்தியாவின் வேளாண்மை பல உச்சங்களைத் தொட்டுள்ளது. வாழைப்பழ விளைச்சலில் சீனா, பிரேசில் ஆகிய நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி உலகின் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இதேபோல எருமைப்பாலில் முதலிடம், நெல், கோதுமை, கரும்பு, பச்சைக் காய்கறிகள், உருளைக்கிழங்கு, பருத்தி, பசும்பால் ஆகியவற்றில் உலகில் இரண்டாம் இடத்தைக் கைப்பற்றியுள்ளது இந்தியா. அணைகள், நீர்நிலைகள் கணிசமாக உயர்ந்துள்ளன.

நில மட்டத்திலிருந்து 50 அடி உயரத்திற்கு மேல் இருக்கும் பேரணைகளால் ஏற்பட்டுள்ள சூழலியல் சீர்கேடுகள் ஒருபுறம் இருக்க, இந்தியாவில் இப்போது நாம் பெற்றிருக்கும் 5,000 பெரிய அணைகள் மூலம் 220 டெராலிட்டர் நீரைச் சேமித்துவைக்க முடியும். நேருவின் கனவுத் திட்டமான ஐந்தாண்டுத் திட்டம், சோவியத் ரஷ்யாவின் திட்டத்தை மாதிரியாகக் கொண்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை, மீன் வளம் போன்ற முதன்மைத் துறைகளுக்கான ஒதுக்கீடு அதிகமாக்கப்பட்டு, மூலப்பொருள்களை உருவாக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

தலைகீழ் மாற்றம்: மின்சாரம் இல்லை என்றால் இந்திய வேளாண்மையே இல்லை என்று கூறும் அளவிற்கு மின்சாரத்தின் பயன்பாடு மிக அதிக அளவு உயர்ந்தது. இயந்திரங்களின் பயன்பாடும் கணிசமாக அதிகரித்துள்ளது. உழவு மாடுகளின் இடத்தில் உழவுந்துகள் (டிராக்டர்கள்) உலவுகின்றன.

மக்களின் கைகளில் இருந்த நாட்டு விதைகளின் இடத்தில் நிறுவனங்களின் கலப்பின விதைகளும், சாண உரங்கள் வண்டல் உரங்களின் இடத்தில் யூரியா, டிஏபி போன்ற வேதி உரங்களும் வந்துவிட்டன. குறிப்பாக, 'பசுமைப் புரட்சி' இந்திய வேளாண் துறையில் மட்டுமல்லாது, சமூக அளவிலும் பெரும் மாற்றங்களுக்கு வித்திட்டது.

தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் வேளாண்மையிலிருந்து வெளியேறி

தொழில்துறையில் கவனம் செலுத்தத் தொடங்கின.

நிலத்தடி நீர் எட்ட முடியாத ஆழத்திற்குச் சென்றுவிட்டது. மண்ணின் வளமை வேதிப்பொருட்களால் பாழ்பட்டது. இயற்கைச் சூழலுக்கும் வேளாண்மைக்கும் இருந்த உறவு துண்டிக்கப்பட்டது. வேளாண்மைத் தொழில்நுட்பம் மேற்கத்திய நாடுகளின் கைகளுக்கு மாற்றப்பட்டது. ஆண்டுக்கு 12,000 உழவர்கள் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

கடன் இல்லாத உழவர்கள் இல்லை என்று தகவல்கள் உள்ளன. உத்தரவாதமற்ற மழை, வெயில், பூச்சிகள் என்று பருவநிலை சார்ந்த நெருக்கடிகள் இருந்தபோதிலும் இந்திய உழவர்கள் தங்களை வருத்திக்கொண்டு உணவை வழங்கிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

உலகமயத்தின் பின்னணியில்ஞ்: பசுமைப் புரட்சிக் காலத்தில் விதைகள், உரங்கள் போன்றவற்றில் இந்தியா எப்படிப் பிற நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டியதாயிற்றோ, அதேபோல 1991ஆம் ஆண்டுக்குப் பின்னர், தொழில்நுட்ப ஆராய்ச்சிகளில் அமெரிக்கா போன்ற நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டியதாயிற்று.

மரபீனித் தொழில்நுட்பங்கள் முற்றிலும் பெரும் விதை நிறுவனங்களைச் சார்ந்து இருக்க வேண்டியதாயிற்று. வேளாண்மையை வணிகத்திற்குள் கொண்டுவரும் போக்கு உருகுவே நாட்டில் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற உலக வணிக நிறுவனத்தின் ஏற்பாட்டில் தொடங்கப்பட்டது.இதன் விளைவாகப் பல்வேறு ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் உலக அளவில் வேளாண்மையை வணிகத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டன.

அந்த ஒப்பந்தங்களில் இந்தியாவும் கையொப்பமிட்டது. 'வரிகள் மற்றும் சுங்கத் தீர்வைக்கான பொது உடன்படிக்கை'யின் (GATT) விளைவாக ஏற்பட்ட 'வேளாண்மைக்கான ஒப்பந்தம்' (AoA), வேளாண்மைக்கான மானியங்கள் யாவற்றையும் நீக்கியது.

இந்த ஒப்பந்தங்கள் 1994ஆம் ஆண்டு மொராக்கோவின் மரகேசில் அங்கீகரிக்கப்பட்டன. இறையாண்மை கொண்ட இந்தியா தனக்கான முடிவுகளை எடுக்க இயலாதவாறு வணிக ஒப்பந்தங்கள் இறுக்கிவிட்டன.

காந்தியம் காட்டிய வழி: காந்தியடிகள், கிராமங்கள் உயிர் பெற்றால்தான் அமைதியும் மகிழ்ச்சியும் உள்ள இந்தியா உருவாகும் என்று கருதினார். அதை அறிவியல் முறையில் இலக்கணமாக மாற்றித் தந்தவர் ஜே.சி.குமரப்பா.

அவரைப் போன்றவர்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு 17.4%,அத்துடன் நீர்ப்பாசனத்தைச் சேர்த்தால் 31% ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 21%என்று குறைந்துகொண்டே வந்து 10ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 3.86% ஆகக் குறைக்கப்பட்டது. குமரப்பா இந்தியாவிற்கு ஏற்றதாக வேளாண்மையையும், கைத்தொழில்களையும் அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சிதான் பொருத்தமானது என்று கருதினார்.

குவியல் முறையும், தனியார் துறையும் ஆபத்தானது என்று கூறினார். நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், கூட்டுறவு முறை வளர்ச்சியடைய வேண்டும், அதுவே உலகம் முழுமைக்கும் அமைதியையும் மகிழ்ச்சியையும் கொண்டுவரும் என்று வலியுறுத்தினார். அது இந்தியாவில் நடைபெறவே இல்லை.

தாக்குப்பிடிக்கும் சாதனை: ஏறத்தாழ பத்தாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான மரபைக் கொண்ட இந்திய வேளாண்மை, அதற்கே உரிய சூழலியல், திணையியல் பொருத்தப்பாட்டின் காரணமாக இன்னும் தாக்குப்பிடித்துப் பல்வேறு சாதனைகளை நிகழ்த்திவருகிறது.

இந்தியா ஆங்கிலேயர்களிடம் இருந்து அரசியல் விடுதலை பெற்றபோது, மக்கள்தொகை ஏறத்தாழ 36 கோடி; அப்போது இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) வேளாண்மையின் பங்கு 51.9%.இந்தியாவின் தற்போதைய உத்தேச மக்கள்தொகை ஏறத்தாழ 139 கோடி. அதே நேரம் வேளாண்மை ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP), 2017ஆம் ஆண்டு, 15.4 % ஆகக் குறைந்தது.


அதன் பின்னர் கரோனாவின் தாக்கத்தால் 2021ஆம் ஆண்டில் 19.9%ஐத் தொட்டது. ஆக, வணிகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பார்த்தால், வேளாண்மையின் இடம் மிகப்பெரிய அளவில் சரிந்துள்ளது. ஆனால், இவ்வளவு சிரமங்களுக்கு உள்ளானபோதும் 63 கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பு (45.6%) வேளாண்மைத் துறை மூலமே கிடைத்துவருகிறது.

# Parsa Praveen, Inspector/RPF/ Mambalam Railway station.









14.08.2022 between 17.30 -18.30 hrs, A special anti sabotage check was conducted at Mambalam Railway station by Sri. Parsa Praveen, Inspector/RPF/Mambalam Railway station along officers and staff with the help of Metal Detectors and Dog "Tyson" for strengthening the security and to avoid any untoward incidents in view of forthcoming 75th Independence day of India. During the drive, randomly checked the baggage of passengers at Mambalam Railway station. During the check, no any incriminating article was found.

# விரைவில் 79 புதிய மருத்துவமனைகள் மக்களின் பயன்பாட்டுக்கு வரவுள்ளது

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



மாநில அளவிலான மழைக்கால நோய்கள் மற்றும் டெங்கு தடுப்பு பணிகள் குறித்த கலந்தாய்வு கூட்டம் சென்னை ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனையில் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பெரியகருப்பன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சுகாதாரத்துறை அதிகாரிகள், அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரிகளின் முதல்வர்கள், வருவாய் துறை, ஊரக வளர்ச்சித்துறை உள்ளிட்ட துறைகளின் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

அதன் பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது: தமிழகத்தில் தடுப்பூசி போடும் பணி ஒரு இயக்கமாகவே மாற்றப்பட்டுள்ளது. 95.96 % முதல் தவணை தடுப்பூசியும், 89.44 % பேர் இரண்டாவது தவணை தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது. டெங்கு, மலேரியா டைபாய்டு உள்ளிட்ட மழைக்கால நோய்களால் 2017 ல் தான் அதிகபடியானவர்கள் பாதிக்கப்பட்டு 65 பேர் மரணம் அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு மே மாதம் மட்டும் 10,136 பேர் தமிழகத்தில் மரணம் அடைந்துள்ளனர். 85 லட்சம் பேர் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் பயன் பெற்று இருக்கிறார்கள், 1.5 லட்சம் பேர் இன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் பயன்பெற்று இருக்கிறார்கள். 25 ஆரம்ப சுகாதார நிலையம், 25 சுகாதார நிலையம் என மொத்தமாக 50 சுகாதார நிலையங்கள் அமைய உள்ளன.

அதற்கான அறிவிப்பை தமிழக முதல் அமைச்சர் வெளியிட இருக்கிறார். தமிழகத்தில் 79 புதிய மருத்துவமனைகள் கட்ட வேண்டும் என்று முதல்அமைச்சர் அறிவித்திருந்தால் தற்போது 60க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளில் பணிகள் நிறைவு பெற்று இருக்கிறது. மிக விரைவில் தமிழகத்தில் 79 புதிய மருத்துவமனைகள் மக்களின் பயன்பாட்டுக்கு வரவுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

# மாணவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்க 800 டாக்டர்கள் நியமனம்

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி




மாணவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்க 800 டாக்டர்கள் நியமிக்கப்பட்டு உள்ளதாக ஈரோட்டில் அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி கூறினார். மனநல ஆலோசனை ஈரோடு புத்தக திருவிழாவில் அமைக்கப்பட்டு உள்ள புத்தக அரங்குகளையும், தமிழக அரசின் சார்பில் அமைக்கப்பட்டு உள்ள இல்லம் தேடி கல்வி அரங்கையும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று பார்வையிட்டார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: பள்ளியறை பூங்கொத்து திட்டம் கருணாநிதியால் கொண்டு வரப்பட்டது. அதை மீண்டும் நல்ல முறையில் செயல்படுத்த முயற்சி எடுத்து வருகிறோம். மாணவ மாணவிகளுக்கு மனநல ஆலோசனை வழங்குவதற்கு ஆர்.பி.எஸ். திட்டம் மூலமாக 413 ஒன்றியங்கள் பிரிக்கப்பட்டு உள்ளது. மாணவ மாணவிகளுக்கு மனநல ஆலோசனை முக்கியம் என்பதால், 3 மாதங்களுக்கு ஒருமுறை டாக்டர்கள் பள்ளிக்கூடங்களுக்கு சென்று ஆலோசனை வழங்க உள்ளார்கள். இதற்காக 800 டாக்டர்கள் நியமிக்கப்பட்டு உள்ளார்கள்.

தமிழகத்தில் பிளஸ்1 பொதுத்தேர்வு ரத்து செய்யப்படாது. வழக்கம்போல் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்1, பிளஸ்2 வகுப்புகளுக்கு பொதுத்தேர்வுகள் நடத்தப்படும். ஆசிரியர் தகுதி தேர்வு எழுதியவர்களின் கோரிக்கைகள் நியாயமானதாக உள்ளது. அவர்கள் உணர்வுக்கு மதிப்பு கொடுத்து தமிழக முதல் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்று உள்ளோம். போதை பொருட்கள் கடந்த 10 ஆண்டுகளாக தமிழகத்தில் போதை பொருட்கள் பழக்கத்தை தடுக்க கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. போதை பொருட்கள் பயன்பாட்டை கட்டுப்படுத்த தமிழக முதல் அமைச்சர் உத்தரவிட்டு உள்ளார். அதன்படி போலீசார் அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். 12ந் தேதி முதல் 19ந் தேதி வரை போதை பொருட்கள் தடுப்பு விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்படுகிறது. இதுதொடர்பாக கல்வித்துறை, போலீஸ் துறை, சமூக நலத்துறை உள்பட பல்வேறு துறை சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறினார். முன்னதாக ஈரோடு பெரியார்வீதியில் உள்ள பெரியார்அண்ணா நினைவகத்துக்கு சென்ற அவர் பெரியார் மற்றும் அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் தி.மு.க. மாநகர செயலாளர் சுப்பிரமணியம், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் கே.இ.பிரகாஷ் உள்பட பலர் உடனிருந்தனர்.

Printed, Published and Owned by: **K.Vijayaraghavan** and Printed at **CHENNAI OFFSET PRINTERS,** No.19/1, 21/2, kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai 600 002. Published at No.225, (First Floor), Gandhi Road,Kavery Nagar, Saidapet, Chennai-600 015. **Editor: K.Vijayaraghavan**


Sumeet
STRONG & RELIABLE
Since : 1963
Available at all leading Stores
Web Site : www.sumeetindia.com
Help Line ; +91 44 93828 48405


Share an experience
with a Dyanora TV-owner
from Japan-
the land of electronics.
The proud owner
Mr. K. Iwamura,
General Manager,
The Bank of Tokyo Ltd.
Bombay
'Pure sound...superb clarity...
elegant looks, in short,
Dyanora's uncompromising
standards of quality
really surprise me.'
Dyanora
Solid State TV


Since : 1973
Dyanora
We Think Next Generation
www.dyanoraindia.com
HOT APP
02:50
SPORTS
TOPIC
MUSIC